
# தமிழகப் பழங்குடிகள்

## வரலாறு சமூகம் பண்பாடு

முதன்மைப் பதிப்பாசிரியர்
முனைவர் ச. அரிச்சந்திரன்

தொகுதி – 1



பதிப்பாசிரியர்
முனைவர் ஆ. சரவணன்

**தமிழகப் பழங்குடிகள்;** வரலாறு சமூகம் பண்பாடு

**(தேசியக் கருத்தரங்கம்)**

முதன்மைப் பதிப்பாசிரியர் : **முனைவர் ச. அரிச்சந்திரன்**
பதிப்பாசிரியர் : **முனைவர் ஆ. சரவணன்**
பதிப்புரிமை : **முனைவர் ச. அரிச்சந்திரன்**
முதற்பதிப்பு : ஆகஸ்ட், 2018
வெளியீடு : **தமிழ்த்துறை (சுயநிதிப்புலம்)**
**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**
கோயம்புத்தூர் - 641 029.
கணினியாக்கம் : பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் - 29.
அச்சாக்கம் : பிரடாக் பிரிண்ட்,
476, பூமாதேவி கோவில் அருகில்
கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)
கோயம்புத்தூர் - 29.
அலைபேசி : 98432 73994, 91505 91017
பக்கங்கள் : XXVI + 432 = 458
விலை : உரு. 400/-

**ISBN : 978 - 93 - 80800 - 89 - 9**

**Tribes of Tamil Nadu ; History Society and Culture**

Chief Editor : **Dr. S. Arichandran**
Editor : **Dr. A. Saravanan**
Copyright's : **Dr. S. Arichandran**
First Edition : August, 2018
Published : **Department of Tamil (SF)**
**Kongunadu Arts and Science College**
Coimbatore - 641 029.
Computer : **Prdag Print**, Coimbatore - 29.
Printing at : **Prdag Print**
476, Near Boomadevi Kovil
G.N. Mills (Po), Coimbatore - 29.
Cell : 98432 73994, 91505 91017
Pages : XXVI + 432 = 458
Prize : **Rs. 400/-**

26. ஆனைமலைக் காடர்களின் வாழிடங்கள் 193

**முனைவர் ஜே.ஆர். இலட்சுமி**

27. காடர்களின் கதையும் அறமும் 199

**முனைவர் ப. குணசுந்தரி**

28. காடர் திருமணம் தொடர்ச்சியும் மாற்றமும் 213

**திரு. தே. ராஜ்குமார்**

29. காணி பழங்குடிகளின் வாழ்வியலில் சாற்றுப்பாடல்கள் 219

**முனைவர் ராச. ராஜஸ்ரீ**

30. காணிக்காரர்களின் வழிபாடும் பழக்கவழக்கமும் 225

**முனைவர் த. மகிலாஜெனி**

31. காணிக்காரர்களின் ஆவி வழிபாடு 229

**முனைவர் மு. செல்வி**

32. காணிக்காரர்களின் மகரக் கொடுதியும் மலையரையன்களின் மகரமாத விழாக்களும் 234

**இல. இராஜசேகரன்**

33. காணிக்காரப் பழங்குடி மக்களின் பண்பாடு 239

**ச. தேவிரமா**

34. நீலகிரி ஆலுக்குறும்பரின் குல தெய்வ வழிபாட்டு முறை 245

**முனைவர் ர. விஸ்வநாதன்**

35. நீலகிரி மாவட்ட குறும்பர்களின் பண்பாடு 249

**த. கஸ்தூரி**

36. நீலகிரி மலைவாழ் பெட்டக் குறும்பர் இனவரைவியல் 259

**இரா. கவிதா**

37. குறும்பர்களின் வாழ்வியல் கூறுகள் 265

**முனைவர் வெ. சுகந்தா**

38. இராமரணை பகுதிவாழ் ஆலுக்குறும்பர் இனவரைவியல் 271

**ச.க. உமாமகேஸ்வரி**

39. நீலகிரி கோத்தர் வாழ்வியல் 276

**முனைவர் சி. சித்ரா**

# 37. குறும்பர்களின் வாழ்வியல் கூறுகள்

**முனைவர் வெ. சுகந்தா**
இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர்
தமிழ்த்துறை (சுயநிதிப்புலம்)
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோவை.

பழங்குடிகள் என்னும் சொல் பொதுவாக மூதாதையரிடமிருந்து தோன்றிய பல குடும்பங்களைக் கொண்ட ஒரு குழுவையும், குறிப்பிட்ட பகுதியில் வாழும் தன்மைகளையும், தங்களுக்கெனத் மொழியைப் பேசும் இயல்பையும், திருமணம், செய்யும் தொழில் ஆகியவற்றில் சில வேறுபட்ட தன்மைகளைக் கொண்டும் பழங்குடி மக்கள் தமிழகத்தில் 36 வகையினராக வாழ்ந்து வருகின்றனர். இதில் தமிழக அரசின் 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்குப்படி தமிழகத்தில் மொத்த மக்கள் தொகையில் 1.04 சதவீதம் உள்ளனர். இவர்களில் 23.35 சதவீதம் மட்டுமே கல்வி அறிவு பெற்றவர்கள். (டாக்டர் நசீம்தீன், 1981) இதில் இருளர், குறும்பர், பணியர், காடர், கோத்தர், தோடர், காட்டு நாயக்கர் ஆகிய பழங்குடிகளை மாத்திரமே பூர்வீகப் பழங்குடிகளாக இந்திய அரசு அறிவித்துள்ளது.

இப்பழங்குடிகள் தனக்கென தனிப்பட்ட பண்பாடோடும். அடையாளத்தோடும் குறிப்பிட்ட எல்லைப் பகுதிகளுடன் சமத்துவ உணர்வுடன் பகிர்ந்தளிக்கும் எண்ணத்துடன் வாழ்பவர்கள் மற்றும் பாரம்பரிய அறிவைப் பயன்படுத்தி வாழ்பவர்கள்தான் பழங்குடிகள் என்பதற்கு மானிடவியலாளர் கருத்துக் கூறுகின்றனர். மனித இனத்தின் உயிரியல் படி மலர்ச்சியும், பண்பாட்டு படி மலர்ச்சியும் ஒரு சீரான வளர்ச்சிப் பாதையினை கொண்டவைகளாக உள்ளன. பண்பாட்டுப் படி மலர்ச்சியான எளிய நிலையில் தொடங்கிக் காலப் போக்கில் பல சிக்கல் நிறைந்த கலப்பு நிலைகளாக மாறி அது மென்மேலும் எளிமையற்ற போக்கை வளாத்துக் கொண்டது. தொடக்கத்தில் சமத்துவ சமுதாயங்களும், பின்னர் தரநிலைச் சமுதாயங்களும் அதன் பின்னாக வர்க்கச் சமுதாய முறையானது முதலில் குலக்குழு அமைப்பாகவும் பின்னர் பழங்குடி அமைப்பாகவும் படிமலர்ச்சியடைந்தது. என்றும் மானிடவியலாளர் குறிப்பிடுகின்றனர். இத்தகைய பழங்குடி மக்கள் இன்றும் கூட பொருளாதார வளர்ச்சியிலும் கல்வி வளர்ச்சியிலும் பின்தங்கிய நிலையில் இன்றளவும் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் குறும்பர் பழங்குடிகளின் வாழ்வியல் குறித்து இக்கட்டுரை விளக்குகிறது.

## வாழ்க்கை முறை

இவர்கள் தங்கள் இனத்தலைவர்களின் ஆணைக்கும், தலைமைக்கும், அதிகார எல்லைக்கும் மட்டுமே அடங்கி வாழும்